## மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2015

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்புகளையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ள 1980 இன் 01 ஆம் இலக்க மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக வழிகாட்டியின் 20 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவம் கடைப்பிடித்த கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் படி நிறுவகத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 22,814 பெறுமதியான காசோலையொன்று கணக்கீடு செய்யப்படாமல் வங்கியிலிடப்பட்டிருந்தது. அக்காசோலை மதிப்பிழந்திருந்ததுடன், அதுவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. வங்கியினால் அறவிடப்பட்ட மதிப்பிழந்த காசோலைக் கட்டணம் உட்பட ரூபா 22,879 தொகையை உரிய நிறுவகத்திடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் வங்கி கணக்கில் நேரடியாக வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 668,600 கூட்டுத் தொகையுடைய மீதி குறிப்பாக இனங்காணப்படாமல் ரூபா 468,100 ஆன பாடநெறிக் கட்டணங்கள், ரூபா 55,000 ஆன பதிவுக் கட்டணங்கள் மற்றும் ரூபா 145,500 ஆன பரீட்சைக் கட்டணங்கள் என நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற 2 பாடநெறிகளுக்கு பாடநெறிப் பணிப்பாளர்களாக ஒப்பந்த அடிப்படையில் ஒரே நபர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், நியமனக் கடிதத்தின் பிரகாரம் அப்பதவியில் நாளொன்றுக்கு 04 மணித்தியாலங்கள் சேவை புரிய வேண்டும். அதன் பிரகாரம் இரண்டு பதவிகளில் கடமை மேவுகை 08 மணித்தியாலங்கள் சேவையாற்ற வேண்டிய போதிலும், சேவையாற்றியதை உறுதிப்படுத்துவதற்கு வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவுகள் இல்லாததன் காரணமாக கணக்காண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 570,000 ஆன படியை உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டு முதல் ரூபா 523,345 கையிருப்பானது முற்பண சீராக்கமாக வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளின் கீழான மீதிகளை

மெய்மையாய்வு செய்வதற்குப் போதியளவு சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

---

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீதி, நிலையான சொத்துக்கள் பதிவேட்டுடன் ஒப்பிடப்பட்ட போது ரூபா 78,285,350 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த உத்தரவாத காலப்பகுதியில் நிர்மாணத் தவறுகள் காணப்படுமாயின், அதற்குரித்தான கழிவுகள் மேற்கொள்ளப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களிலிருந்து தவறுக்கான பொறுப்புக்காலத்தின் இறுதியில் குறித்த ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட வேண்டிய போதிலும், நிர்மாண வழுக்கள் தொடர்பாக எவ்வித மதிப்பீடும் மேற்கொள்ளப்படாமல் 2 வருடங்கள் முதல் 6 வருடங்கள் வரை ரூபா 323,700 கூட்டுத்தொகையுடைய நிறுத்தி வைக்கப்பட்ட பணம் தீர்வு செய்யப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) எட்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 43,479 ஆன பெறவேண்டிய வங்கி வட்டியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்குப் புறம்பாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி 2014 மே 02 ஆந் திகதி முதல் மதியுரையாளர் பதவியொன்றுக்காக ஒப்பந்த அடிப்படையில் நபரொருவர் சேர்க்கப்பட்டு 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது முறையே ரூபா 326,400, ரூபா 416,600 என படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) கல்விசார் குழுக்கள் மூலம் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை மீண்டும் கருத்திற் கொள்வதற்காக கல்விசார் நடவடிக்கைகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான நிலையான குழுவினால் (Academic Affairs, Accreditation, Examinations & Discipline) என்ற பெயரிலான குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டு மாதத்திற்கு ஒரு முறை கூட்டமொன்றை நடாத்தி, முறையான அங்கீகாரமின்றி குழுவின் உறுப்பினரொருவருக்கு ரூபா 2,000 வீதம் மீளாய்வாண்டில் ரூபா 126,000 படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க நிதிப் பிரமாணம் | |
| நிதிப் பிரமாணம் 371 | (I) கட்டு நிதி வழங்கல் பதவிநிலைத் தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்த போதிலும், 32 பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 716 சந்தர்ப்பங்களில் ரூபா 13,601,387 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.<br><br>(II) உரிய செயற்பாடு பூர்த்தியடைந்த உடனேயே பெற்றுக்கொண்ட முற்பணம் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 04 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 93,850 பெறுமதியான முற்பணம் 37 நாட்கள் முதல் 187 நாட்கள் வரையான கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தன. |
| (ஆ) பல்கலைக்கழக தாபன விதிக் கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1, 3.2 ஆம் பிரிவுகள் | மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா சகல உத்தியோகத்தர்களினதும் வருகை மற்றும் வெளிச் செல்கை நேரம் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும், கல்விசார் பதவியணியினரில் 7 உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் விடுமுறைகளை உறுதிப்படுத்த முடியாததன் காரணமாக ரூபா 12,845,878 கூட்டுத்தொகையான சம்பளம் மற்றும் படிகளின் சரியான தன்மையை பரீட்சிக்க முடியாதிருந்தது. |
| (இ) 2015 சனவரி 22 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு பிரயாணச் செலவினம், எரிபொருள் படிகள் செலுத்தப்பட்டிருக்கையில் முறையான அங்கீகாரமின்றி இணைந்த படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |
| (ஈ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | ஒரு தடவையில் வழங்க முடியுமான ஆகக்கூடிய முற்பணம் ரூபா 100,000 ஆக இருந்த போதிலும், அதற்கு முரணாக ரூபா 105,600 முதல் ரூபா 464,954 வரையான வீச்சினுள் 22 சந்தர்ப்பங்களின்போது ரூபா 3,540,134 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| (உ) | 2006 இன் அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 2.8.1 ஆம் பிரிவு | கேள்வி மதிப்பீட்டிற்கு நியமிக்கப்படுகின்ற தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவில் குறித்த விடயம் தொடர்பான விசேட நிபுணத்துவத்தைக் கொண்ட ஒருவர் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 19,042,290 ஆகும். அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 5,945,485 ஆகும். முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 24,987,775 ஆன அதிகரிப்பைக் காட்டியது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிறுவகத்தின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 42,057,645 ஆல் அதிகரித்த போதிலும், மீண்டெழும் செலவினத்திற்கான அரச மானியம் மற்றும் ஏனைய வருமானம் என்பன ரூபா 64,747,740 ஆல் அதிகரித்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை மீளாய்வு செய்த போது 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நிதி விளைவுகளில் பற்றாக்குறை தென்பட்ட போதிலும், ஏனைய ஆண்டுகளில் நிதி மிகை ஈட்டப்பட்டிருந்தது. ஊழியர் ஊதியம், அரசிற்கு செலுத்திய வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பன சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் நிறுவகத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரிப்பைக் காட்டியது. 2014 மற்றும் 2015 ஆம் ஆணடுகளில் நிறுவகத்தின் பங்களிப்பு முறையே ரூபா 111,439,585 மற்றும் ரூபா 163,669,190 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பங்களிப்பு 47 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காண்டில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைச் சேவை செய்வதற்காக 06 நிறுவனங்களுக்கு ரூபா 655,105 செலுத்தப்பட்டிருந்த போதிலும், உரிய சேவைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மருத்துவ விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் அமைந்துள்ள சுகாதார அமைச்சிற்குரிய 0.2074 ஹெக்டேயர் காணியின் சட்டரீதியான உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்காக 2014 ஆம் ஆண்டின் போது தனியார் கம்பனியொன்றுக்கு ரூபா 26,250 செலுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அச்செயற்பாட்டை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 159,925,550 கிரயத்திலான கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாணத் திட்டத்திற்கு கொழும்பு மாநகர சபையிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தினால் 2014 ஆம் ஆண்டின் போது 73 மாணவர்களுக்கும் 2015 ஆம் ஆண்டின்போது 39 மாணவர்களுக்கும் ரூபா 3,000 ஆன பதிவுக் கட்டணத்தைச் செலுத்தாமல் பாட நெறிக்குச் சமூகமளிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்ததுடன், கணக்காண்டு இறுதித் திகதி வரை அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை பதிவுக் கட்டணமாகிய ரூபா 336,000 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செலவின மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமல் முற்பணம் வழங்கியமை காரணமாக ரூபா 364,080 ஆன செலவினமொன்றுக்காக ரூபா 941,800 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது.

(இ) தந்திரோபாயத் திட்டம் மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் நிறுவகத்தின் நடவடிக்கைகளில் ஏற்படும் உறுதிப்படுத்தக்கூடிய செயன் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக 2013 ஆம் ஆண்டின் போது கிடைத்த ரூபா 3,913,400 மானியமானது கணக்காண்டின் இறுதித் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.4 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நிர்வாகம்**

பிரதான கட்டிடத்தின் முதலாம் மாடியின் மலசலகூட முறைமையின் திருத்த வேலைக்காக கேள்வி கோரும் போது குறைந்த விலை விபரங்களாக ரூபா 2,441,970 ஆக வழங்கப்பட்டிருந்த கேள்விக்குப் பதிலாக ரூபா 2,969,790 ஆன இரண்டாவது விலையைச் சமர்ப்பித்திருந்த கேள்விதாரர் தெரிவுசெய்யப்பட்ட காரணத்தினால் நிறுவகத்திற்கு ரூபா 527,820 நட்டம் ஏற்பட்டிருந்தது. குறைந்த விலையைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்கு முன் அனுபவம் இல்லாமையே கேள்வியை நிராகரித்தமைக்கான காரணமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதற்கு 04 மாதங்களுக்குப் பின்னர் அந்நிறுவனத்திற்கு ரூபா 11,961,740 பெறுமதியான வேறொரு ஒப்பந்தமொன்றும் வழங்கப்பட்டிருந்தது.

**4.5 இனங் காணப்பட்ட நட்டம்**

2006 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை பணிப்பொறுப்பைக் கையளித்தல் அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த 12 உத்தியோகத்தர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் பங்களிப்புப் பணம் செலுத்தாமையினால் மேற்குறித்த காலப்பகுதிக்குரிய ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பங்களிப்பான ரூபா 793,778 மற்றும் மிகைக் கட்டணமாகிய ரூபா 1,073,707 என மொத்தம் ரூபா 1,867,485 நிறுவகத்தின் நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) ஆதனங்களின் உரித்தை உறுதிப்படுத்தாமை, பராமரித்தல் மற்றும் கைதவிர்த்தல் தொடர்பான பலவீனங்கள் காணப்படல். |
| | (ii) பொருளிருப்பு பொருட்களுக்குரிய பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமையும் பொருள் மெய்மையாய்வு அறிக்கையுடன் இணங்காமையும் |
| (ஆ) நிதிக் கட்டுப்பாடு | முற்பண எல்லைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை மற்றும் குறித்த காலத்தில் தீர்வு செய்யப்படாமை. |